## பாராலிம்பிக்ஸ் - 2024 இல்

# வெள்ளிப்பதக்கம் வென்ற துளசிமதி முருகேசனுக்கு வாழ்த்து!

### முதல்வர் மு.க.ஸ்டாலின் சமூகவலைதளப் பதிவு!

**சான்பிரான்சிஸ்கோ, செப் 4 -**

**தமிழ்நாட்டைச் சேர்ந்த துளசிமதி முருகேசன் பாராலிம்பிக்ஸ் பேட் மிண்டனில் வெள்ளிப்பதக்கம் வென்றதற்கு முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்கள் வாழ்த்து தெரிவித்துள்ளார்.**

இதுகுறித்து முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்களின் சமூக வலை தளப் பதிவு வருமாறு:-

வெள்ளிப் பதக்கம் வென்ற துளசிமதி முருகேசனுக்கு வாழ்த்து! பாராலிம்பிக்ஸ் 2024இல் வெள்ளிப் பதக்கம் வென்றதற்குத் துளசிமதி முருகேசன் அவர்களுக்கு வாழ்த்துகள்!

உங்களின் அர்ப்பணிப்பும், எதிலிருந்தும் மீண்டு வரும் பண்பும், தளராத மனப்பான்மையும் லட்சக்கணக்கானோரை ஊக்கமாக அமைந்துள்ளது. உங்கள் வெற்றி யில் பெருமை கொள்கிறோம்!

**வெண்கலம் வென்ற மனிஷா ராமதாஸ்க்கு வாழ்த்து!**

மேலும் வெண்கலம் வென்ற மனிஷா ராமதாஸ்க்கு சமூக வலைதளப் பதிவில் முதல்வர் மு.க.ஸ்டாலின் வாழ்த்து தெரிவித்துள்ளார்.

அது வருமாறு:

பாராலிம்பிக்ஸ் 2024இல் வெண்கலப் பதக்கம் வென்றுள்ள மனிஷா ராமதாஸ் அவர்களுக்கு வாழ்த்துகள்!

உங்கள் மனவலிமையும் உறுதிப்பாடும் தேசத்திற்குப் பெருமை சேர்த்துள்ளது. எப்போதும் ஜொலித்துக்கொண்டே இருங்கள்!

இவ்வாறு முதல்வர் அவர்கள் வாழ்த்துத் தெரிவித்துள்ளார்.

# முத்தமிழறிஞர் கலைஞரின் சகோதரத்துவம்!

### பேராசிரியர் சுப.வீரபாண்டியனின் (3.9.2024) ஒரு நிமிட செய்தி !



**1989** ஆம் ஆண்டு, ஏப்ரல் மாத சட்டமன்றக் குறிப்புகளை புரட்டிக் கொண்டிருந்தபோது, பட்டியலின மக்களுக்காக தலைவர் கலைஞர் அவர்கள் முன்மொழிந்த திட்டங்கள் பலவற்றை காண முடிந்தது.

ஏப்ரல் மாதம், 5 ஆம் தேதி, "பட்டியலின மக்களுக்கு 45 கோடி ரூபாய் செலவில் கான்கிரீட் வீடுகள் கட்டிக் கொடுக்கப்படும்" என்று அறிவித்தார்.

அதே மாதம் 12 ஆம் தேதி சட்டமன்றத்திலே ஏ.எஸ்.பொன்னம்மாள் அவர்கள், "அடுத்து உருவாக்கப்படும் மாவட்டம் ஏதோ ஒன்றுக்கு, சுப்பிரமணிய சிவாவின் பெயரை சூட்ட வாய்ப்பிருக்கிறதா?" என கேட்டிருக்கிறார்.

அதற்கு முதலமைச்சராக இருந்த தலைவர் கலைஞர் அவர்கள், "இல்லை, அப்படி எந்தத் திட்டமும் இல்லை. அடுத்து உருவாக இருக்கிற மாவட்டத்திற்கு அம்பேத்கர் பெயர் வைக்கலாம் என்று அரசு எண்ணிக் கொண்டிருக்கிறது" என்று கூறியிருக்கிறார்.

அதே 1989 ஏப்ரல் 30ந் தேதி, சட்டமன்றத்திலே, பட்டியலின மாணவர்களுக்கு, பேருந்துகளில் பயணம் செய்ய கட்டணம் இல்லாத நிலை உருவாக்கப்படுகிறது" என்று அறிவித்ததோடு,

"பட்டியலின இளைஞர்கள் முன்வருவார்களானால் அவர்கள் ஆட்டோ வாங்குவதற்கான கடன் உதவியையும் அரசு செய்யும்" என்று சொல்லியிருக்கிறார்.

இவையெல்லாம் ஒரே ஒரு மாதத்தில் நடந்த நிகழ்ச்சிகள்!



பேராசிரியர்
**சுப.வீரபாண்டியன்**
தலைவர் -
திராவிட இயக்கத் தமிழர் பேரவை

## புல் புல் பறவை

# சாவர்க்கரை காப்பாற்றிய கதை இல்லாத ஏமாற்றத்தில் பேசுகிறார்!

### தமிழ்நாடு ஆளுநருக்கு சு.வெங்கடேசன் எம்.பி. கண்டனம்!

**மதுரை, செப். 4 -**

**"புல் புல் பறவை சாவர்க்கரை காப்பாற்றிய கதை இல்லாத ஏமாற்றத்தில் ஆளுநர் பேசுகிறார்" என்று மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்ட் கட்சியைச் சேர்ந்த மதுரை நாடாளுமன்ற உறுப்பினர் சு.வெங்கடேசன் கண்டனம் தெரிவித்துள்ளார்.**



இதுகுறித்து அவர் விடுத்துள்ள அறிக்கை வருமாறு:-

கல்வியில் சிறந்த மாநிலமாக தமிழ்நாடு விளங்கி வருகிறது. அண்மையில் ஒன்றிய கல்வி அமைச்சகம் வெளியிட்ட உயர் கல்வி நிலையங்களின் தரவரிசை பட்டியலில், முதல் 100 இடங்களில் தமிழ்நாட்டிலிருந்து 22 பல்கலைக்கழகங்கள் இடம் பிடித்துள்ளன.

முதல் 50 அரசு பல்கலைக்கழகங்கள் பட்டியலில் தமிழ்நாடு அரசின், அண்ணா பல்கலைக்கழகம், பாரதியார் பல்கலைக்கழகம், சென்னை பல்கலைக்கழகம், பாரதிதாசன் பல்கலைக்கழகம், அழகப்பா பல்கலைக்கழகம், பெரியார் பல்கலைக்கழகம், அண்ணாமலை பல்கலைக்கழகம், மனோன்மணியம் சுந்தரனார் பல்கலைக்கழகம், தமிழ்நாடு விவசாய பல்கலைக்கழகம் ஆகிய பல்கலைக்கழகங்கள் இடம் பிடித்துள்ளன.

அதிலும், இந்தியாவிலேயே முதல் மாநில பல்கலைக்கழகம் என்ற பெருமையைப் பெற்றுள்ளது அண்ணா பல்கலைக்கழகம். இப்படி தொடக்க கல்வி முதல் உயர்கல்வி வரை கல்வியில் தமிழ்நாடு சிறந்து விளங்கி வருகிறது.

இதனால்தான் ஒன்றிய அரசின் குலக்கல்வியை போதிக்கும் தேசிய கல்விக் கொள்கையை தமிழ்நாடு அரசு எதிர்க்கிறது.

மேலும் இருமொழி கொள்கையிலும் தமிழ்நாடு அரசு உறுதியாக உள்ளது. இதை தாங்கிக் கொள்ள முடியாத ஒன்றிய அரசு, கல்விக்கு தரவேண்டிய நிதியை கொடுக்காமல் நிறுத்தி வைத்துள்ளது.

தற்போது ஆளுநரை வைத்து மாநில அரசின் பாடத்திட்டத்தை விமர்சிக்க தொடங்கி இருக்கிறது. தமிழ்நாட்டில் ஆளுநராக இருக்கும் ஆர்.என்.ரவி, "தேசிய பாடத் திட்டத்தை ஒப்பிடும்போது, மாநில பாடத்திட்டங்கள் தரம் மோசமாக உள்ளது" என பேசியுள்ளார்.

ஆளுநரின் இந்த பேச்சுக்கு அமைச்சர்கள் பொன்முடி, அன்பில் மகேஷ் பொய்யாமொழி ஆகியோர் கண்டித்துள்ளனர். மேலும் கல்வியாளர்களும் எதிர்ப்பு தெரிவித்துள்ளது.

இந்நிலையில் மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்ட் கட்சியின் மதுரை நாடாளுமன்ற உறுப்பினர் சு.வெங்கடேசன், "மாநில பாடத்திட்டம் தரம் தாழ்ந்து இருப்பதாக ஆளுநர் ஆர்.என்.ரவி கூறியுள்ளார்.

புல் புல் பறவை சாவர்க்கரை காப்பாற்றிய கதையோ, முதலைகளிடமிருந்து மோடி தப்பித்த கதையோ தமிழ்நாட்டு பாடங்களில் இல்லை. தனக்கு பிடித்த காட்சி இல்லாத ஏமாற்றத்தை வெளிப்படுத்தும் உரிமை ஆளுநருக்கும் உண்டு" என ஆளுநரின் பேச்சு உள்ளது.

இவ்வாறு சு.வெங்கடேசன் எம்.பி. தமது அறிக்கையில் கூறியுள்ளார்.

## திண்டிவனத்தில் கால்பந்து போட்டி

# வெற்றி பெற்ற அணிக்கு பரிசு !

### அமைச்சர் செஞ்சி மஸ்தான் வழங்கினார்!

திண்டிவனம், செப்.4-

விழுப்புரம் வடக்கு மாவட்ட விளையாட்டு மேம்பாட்டு அணி சார்பில் கழக இளைஞரணி செயலாளரும், இளைஞர் நலன் மற்றும் விளையாட்டு மேம்பாட்டு துறை அமைச்சருமான உதயநிதி ஸ்டாலின் அவர்களின் பிறந்தநாள் விழாவை முன்னிட்டு மாநில அளவிலான மாபெ ரும் கால்பந்து விளையாட்டு போட்டிகள் திண்டிவனம் வால்டர் ஸ்கெடர் பள்ளி வளாகத்தில் நடைபெற்றது.

விழுப்புரம் வடக்கு மாவட்ட பொறுப்பாளர் டாக்டர் சேகர் தலைமை தாங்கினார். திண்டிவனம் நகர செயலாளர் கண்ணன், நகர மன்ற தலைவர் நிர்மலா ரவிச்சந்திரன் ஆகியோர்முன்னிலை வகித்தனர்.

விழுப்புரம் வடக்கு மாவட்ட விளையாட்டு மேம்பாட்டு அணி அமைப்பாளர் கவுன்சிலர் சந்திரன் ஏற்பாட்டில் நடைபெற்ற கால்பந்து விளையாட்டு போட்டியினை சிறுபான்மையினர் நலன் மற்றும் வெளிநாடு வாழ் தமிழர்கள் நலத்துறை அமைச்சர் செஞ்சி மஸ்தான் தொடங்கி வைத்தார்.

விளையாட்டுப் போட்டியில்விழுப்புரம் , கடலூர், செங்கல்பட்டு, சென்னை, வேலூர், திருவண்ணாமலை உள்ளிட்ட பல்வேறு மாவட்டங்களில் இருந்தும் புதுச்சேரி மாநிலத்தில் இருந்தும் 39க்கும் மேற்பட்ட அணிகளைச் சேர்ந்த விளையாட்டு வீரர்கள் போட்டியில்கலந்து கொண்டு விளையாடினர்.

இரண்டு நாட்கள் நடைபெற்ற கால்பந்து போட்டியில் திண்டிவ னம் அணியினர் முதலிடத்தையும், சென்னைராய புரம் பகுதியைச் சேர்ந்த அணியினர் இரண்டாம் இடத்தையும், புதுச்சேரி அணியினர் மூன்றாம் இடத்தையும் சென்னை பல்லாவரம் அணியினர் நான்காம் இடத்தையும் பெற்றனர்.

வெற்றி பெற்ற அணியினருக்கு கோப்பை மற்றும் பரிசுகள் வழங்கும் நிகழ்ச்சி பள்ளி மைதான வளாகத்தில் நடைபெற்றது நிகழ்ச்சியில் சிறுபான்மையினர் நலன் மற்றும் வெளிநாடு தமிழர்கள் நலத்துறை அமைச்சர் செஞ்சி மஸ்தான் கலந்து கொண்டு முதலிடம் பிடித்த திண்டிவனம் அணியினருக்கு ரூபாய் 30 ஆயிரம் பரிசுடன் வெற்றி கோப்பையை வழங்கினார். இரண்டாம் இடம் பிடித்த ராயபுரம் அணியினருக்கு ரூபாய் 20 ஆயிரம், மூன்றாம் இடம் பிடித்த புதுச்சேரி அணியினருக்கு ரூபாய் 15 ஆயிரம், நான்காம் இடம் பிடித்த பல்லாவரம் அணியினருக்கு ரூபாய் 10 ஆயிரம் மற்றும் கோப்பைகளை வழங்கிய அமைச்சர் செஞ்சி மஸ்தான் போட்டிகளில் பங்கேற்ற அனைத்து அணி யினருக்கும் வாழ்த்துக்களை தெரிவித்தார்.

## அமைச்சர் கே.ஆர்.பெரிய கருப்பன் தலைமை ! சிவகங்கை மாவட்ட பொதுக்குழு உறுப்பினர் ஆதி. கண்ணாத்தாள் இல்ல மணவிழா !

# கனிமொழி கருணாநிதி எம்.பி. நடத்தி வைத்து வாழ்த்துகிறார் !

### அமைச்சர்கள் தங்கம் தென்னரசு - எஸ்.ரகுபதி - சிவ.வீ.மெய்யநாதன் வாழ்த்துரை ! மு. தென்னவன் வரவேற்புரை !

*சென்னை, செப்.4-*

*சிவகங்கை மாவட்ட தி.மு.க. பொதுக் குழு உறுப்பினர் திருமதி.ஆதி.கண்ணாத்தாள்-ஆதி.ஆதியான் ஆகியோரது புதல்வர் ஆதி. இராமசாமி - கோவை பெ.அ.நா.அன்புநாதன்-சீதா ஆகியோரின் புதல்வி அ.சுவேதா ஆகியோரின் திருமணம், 6.9.2024-வெள்ளிக்கிழமை அன்று காலை 9.30 மணியளவில் காரைக்குடி - பாண்டியன் திரையரங்கம் அருகில் உள்ள சுப லெட்சுமி பேலசில் நடைபெறுகிறது.*

*மணவிழாவிற்கு மாவட்டச் செயலாளர் - கூட்டுறவுத் துறை அமைச்சர் கே. ஆர். பெரியகருப்பன் தலைமை வகிக்கிறார்.*

*அமைச்சர்கள் தங்கம் தென்னரசு, எஸ்.ரகுபதி, சிவ.வீ.மெய்யநாதன் ஆகியோர் முன்னிலை வகிக்கின்றனர்.*

*முன்னாள் அமைச்சர் முனைவர் மு. தென்னவன் வரவேற்புரையாற்றுகிறார்.*

*திருமணத்தை கழக துணைப் பொதுச் செயலாளர் கனிமொழி கருணாநிதி எம்.பி. நடத்தி வைத்து - மணமக்களை வாழ்த்தி உரையாற்றுகிறார்.*

*குன்றக்குடி பொன்னம் பல அடிகளார், ஒன்றிய முன்னாள் அமைச்சர் ப. சிதம்பரம், காரைக்குடி*



*மாநகராட்சி மேயர் சே. முத்துதுரை, முன்னாள் எம்.எல்.ஏ., கே.ஆர்.இராமசாமி, கார்த்தி சிதம்பரம் எம்.பி., மாங்குடி எம்.எல்.ஏ., தமிழரசி ரவிகுமார் எம்.எல்.ஏ., ராம.கரு.மாணிக்கம் எம்.எல்.ஏ., திராவிடர் இயக்கத் தமிழர் பேரவைத் தலைவர் சுப. வீரபாண்டியன், மாநில மகளிரணிச் செயலாளர் ஹெலன் டேவிட்சன் ஆகியோர் வாழ்த்தி உரையாற்றுகின்றனர்.*

*கழக சட்டத்திட்ட திருத்தக்குழு இணைச் செயலாளர் சுபா. சந்திரசேகர், முன்னாள் எம்.பி., பவானி இராஜேந்திரன், ஏ.ஆர். வீ.காசிநாதன், இன்பா ரகு, ஜி.பி.ராஜா, பி.எல்.படிக்காசு, டி. செந்தில்குமார்*

*மாவட்ட கழக நிர்வாகிகள் அ.கணேசன், த.சேங்கைமாறன், சுப.துரைராஜ்,*

*ஆர்.ஜோன்ஸ் ரூசோ, பா.செந்தில்குமார், கதிர். ராஜ்குமார், என்.நல்லசேதுபதி, துரை.கருணாநிதி அம்பலம், ஏ.வேலுச்சாமி,*

*சி.இலக்குவன், பூரண சங்கீதா, ம.சேசுராசு , சுப. கருப்பையா, சாமி.திராவிட மணி, தி.என்.ஆர்.எஸ். பிராட்லா.*

*தலைமைச் செயற்குழு பொதுக்குழு உறுப்பினர்கள் தா.ராமையா,அ. முக மது, கரு.அசோகன், தெய்வானை இளமாறன், கே. எஸ்.ரவி, ஜெ.மதார்சேட், த.உதயகுமார், பி.டி.ஆர். முத்து, எம்.சோமசுந்தரம்,*

*பெ.பெருமாள், ஆர்.சிங்காரம், திருமதி. ஏ.இ.ஆர். சுரேஷ்குமார், கு. ராஜாங்கம், என்.அம்பலமுத்து ஏ.ஆர்.ஜெயமூர்த்தி உள்பட பலரும் திருமணத்தில் கலந்துகொண்டு வாழ்த்துகிறார்கள்.*

*ஆதி.ராஜ்கணேஷ் நன்றி கூறுகிறார்.*




கழகத் தலைவர், தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களின் அறிவுறுத்தலின்படி, தூத்துக்குடி வடக்கு மாவட்டம், விளாத்திகுளம் சட்டமன்ற தொகுதி, கோவில்பட்டி கிழக்கு ஒன்றிய தி.மு.க. சார்பில் எட்டயபுரத்தில் நடைபெற்ற பொது உறுப்பினர்கள் கூட்டத்தில் தூத்துக்குடி வடக்கு மாவட்டச் செயலாளர், சமூக நலன் மற்றும் மகளிர் உரிமைத்துறை அமைச்சர் திருமதி.கீதாஜீவன், விளாத்திகுளம் சட்டமன்ற உறுப்பினர் ஜி.வி.மார்க்கண்டேயன் கலந்துகொண்டு கழக வளர்ச்சி பணிகள் குறித்து உரையாற்றினார்கள். உடன் கழக நிர்வாகிகள் கலந்து கொண்டனர்.





திருச்சி தெற்கு மாவட்ட கிழக்கு மாநகர கழகத்தின் சார்பாக, இரண்டாவது பொது உறுப்பினர்கள் கூட்டம் திருச்சி கலைஞர் அறிவாலயம் அருகில் உள்ள திருமண மண்டபத்தில் நடைபெற்றது. மாநகர கழகச் செயலாளர் மு.மதிவாணன் தலைமை உரை ஆற்றினார். கூட்டத்தில் மாவட்டச் கழக செயலாளர், அமைச்சர் அன்பில் மகேஸ் பொய்யாமொழி சிறப்புரையாற்றினார். கூட்டத்தில் பகுதி கழகச் செயலாளர் நீலமேகம், தர்மராஜ், மோகன் பாபு, ராஜ்முகமது, விஜயகுமார், மணிவேல், சிவக்குமார், மாநகர கழக நிர்வாகிகள் நூர்கான், தமிழ்ச்செல்வன், சந்திரமோகன், பொன்செல்லையா, சரோஜினி, மாநில, மாவட்ட, மாநகர நிர்வாகிகள், தலைமைச் செயற்குழு பொதுக்குழு உறுப்பினர்கள், பகுதி, வட்ட, கழக செயலாளர்கள் நிர்வாகிகள், அணிகளின் அமைப்பாளர்கள், துணை அமைப்பாளர்கள், உள்ளாட்சி அமைப்புகளின் பிரதிநிதிகள், மாவட்ட பிரதிநிதிகள், கழக நிர்வாகிகள், தொண்டர்கள் கலந்து கொண்டனர்.